Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165173

1. District : Tiruppur PS: V & AC Year: 2024 FIR No.: 11/2024/AC/TPR Date: 11.11.2024
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்
2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: by PC (Amendment) Act, Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : Date from : 30.10.2024 Date to : 09.11.2024
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 11.00hrs Time to : 12.00hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 09.11.2024 Time : 15.00hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 09.11.2024 G.D.Vol.VI Time : 15.00hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்
4. Type of Information : Written/ Oral : Complaint Statement (Oral)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 25 km North East
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address : O/O. VAO office, Edayapalayam village Uthukuli Taluk, Tiruppur
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : A. Murugesan (b) Father's/ Husband's Name : Arumugam
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 45 yrs (d) Nationality : Indian (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : Ironing (g) Address : No.99, Venkamedu, Edayapalayam village Vallipuram Post, Kunnathur, Uthukuli Taluk Tiruppur.
   தொழில் முகவரி
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Vincent, VAO, Edayapalayam village, Uthukuli Taluk, Tiruppur District.
8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11-11-24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature]
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11·11·2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No. எண் .........
VSAC, Tiruppur.
11·11·2024.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 09.11.2024-ம் தேதி மாலை 15.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.ஆ.முருகேசன், வயது-45, த/பெ.ஆறுமுகம், 99, வெங்கமேடு, எடையபாளையம் கிராமம், வள்ளிபுரம் போஸ்ட், குன்னத்தூர், ஊத்துக்குளி தாலூகா, திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து படித்து காண்பித்து கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு திரு.ஆ.முருகேசன் வயது-45, த/பெ.ஆறுமுகம், 99 வெங்கமேடு, எடையபாளையம் கிராமம், வள்ளிபுரம் போஸ்ட், குன்னத்தூர், ஊத்துக்குளி தாலுகா, திருப்பூர் மாவட்டம். நான் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி தாலுகா, குன்னத்தூர், எடையபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கார்மெண்ட்ஸ் கம்பெனியில் அயனிங் வேலை செய்கிறேன். எனது அப்பா ஆறுமுகம் பெயரில் எடையபாளையம் கிராமத்தில் க.ச.எண்.146-ல் 39 செண்ட் நிலம் ஆவண எண்.7853/2008 படி பாத்தியப்பட்டது. எனது அம்மா மற்றும் அப்பா ஆகியோர் இறந்துவிட்டார்கள். மேற்படி எனது அப்பா பெயரில் உள்ள நிலமானது எனக்கும் எனது அண்ணன்கள் சாமிநாதன், பழனிசாமி ஆகியோருக்கு வாரிசுபடி பாத்தியப்பட்டது. நானும் எனது அண்ணன்களும் எங்களுக்குள்ள பங்குகளை பிரிப்பதற்கு முடிவு செய்து எனது அண்ணன்கள் என்னிடம் நிலத்தை சர்வே செய்து சப்டிவிசன் செய்வதற்கான வேலைகளை பார்க்க சொன்னார்கள். அதன்படி நான் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் எடையபாளையம் விஏஓ அலுவலகம் சென்று விஏஓ திரு.வின்சென்ட் அவர்களை நேரில் பார்த்து நிலத்தை அளந்து சப்டிவிசன் செய்வதற்கு கேட்டேன். அவர் என்னிடம் இருந்து நிலத்திற்கான பத்திர நகலை வாங்கி விட்டு இடத்தை அளந்து தருகிறேன். அளக்க வரும்போது சொல்கிறேன். சர்வே செய்து

சப்டிவிசன் செய்வதற்கான வேலைகளையும் நானே செய்து தருகிறேன் என்று சொன்னார். விஏஓ நிலத்தை அளப்பதற்கு வராததால் நான் விஏஓ அலுவலகம் சென்று விஏஓ அவர்களை பலமுறை பார்த்தேன். அப்போது அவர் இடத்தை அளக்க வருவதாக சொல்லி அனுப்பி வைத்தார். இந்நிலையில் 30.10.2024-ம் தேதி காலை 11.00 மணிக்கு எனது செல்போன் எண்.9360684971-க்கு தொடர்பு கொண்ட பெண் நபர் தான் எலையபாளையம் விஏஓ ஆபீசில் இருந்து சிவகாமி பேசுவதாகவும், விஏஓ உங்களது இடத்தை அளக்க வந்துள்ளதாகவும், இடத்திற்கு வருமாறும் கூறினார். அதன்பேரில் நானும், எனது மகன் வெங்கடேஷ், எனது அண்ணன் சாமிநாதன், அவரது மகன் சங்கர் ஆகியோரும் எங்களது இடத்திற்கு அருகில் சென்றோம். அப்போது சாலையில் விஏஓ திரு.வின்செண்ட் அவர்களுடன் அவருக்கு உதவியாக சிவகாமி, பவித்ரா ஆகியோரும் வந்திருந்தார்கள். நான் அவர்களை அழைத்து கொண்டு நிலத்தை காண்பித்தேன். நிலத்தை அளந்துபின்னர் எனது அண்ணனும், அவரது மகனும் சென்றுவிட்டார்கள். நானும் எனது மகனும் இருந்த போது விஏஓ என்னிடம் உங்களது நிலத்தை அளந்துவிட்டேன் என்று சொல்லி ஒரு பேப்பரில் விஏஓ அவர்கள் எங்களுக்கு வரும் நிலம் குறித்து படம் வரைந்து எங்கள் ஒவ்வொருத்தருக்கும் 13 செண்ட் வரும் என்று சொல்லி படம் வரைந்து கொடுத்தார். நிலத்தினை சப்டிவிசன் செய்ய பிரித்து கொடுக்க நிறைய வேலை உள்ளது இதற்கு நானே அப்ளை செய்து வேலையை முடித்து கொடுக்கிறேன். இதற்கு தனியாக ரூ.10,000/- கொடு என்று கேட்டார். அதற்கு நான் எனக்கும் உடம்பு சரியில்லை எனது அண்ணன்களிடம் கலந்து பேசி சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் சப்டிவிசன் செய்யும் வேலையை முடித்து கொடுப்பேன் என்று கண்டிப்பாக சொன்னார். நான் யோசித்து பார்த்த போது அவர் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது புகார் கொடுக்க முடிவு செய்து எப்போது வர வேண்டும் என கேட்பதற்காக இன்று 09.11.2024-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் விஏஓ திரு.வின்செண்ட் அவர்களது செல்போன் எண்.9865119191-ல் தொடர்பு கொண்டு கேட்ட போது நான் திங்கட்கிழமை அன்று பணத்துடன் உங்களை வந்து பார்க்கட்டுமா என்று கேட்டேன். அவர் சரி வாங்க வாங்க என்று சொன்னார். எங்களுக்குரிய நிலத்தினை தக்க நடவடிக்கை மேற்கொண்டு சப்டிவிசன் செய்து தர பணம் ரூ.10,000/- லஞ்சமாக விஏஓ திரு.வின்செண்ட் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே லஞ்சம் கேட்கும் விஏஓ திரு.வின்செண்ட் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விஏஓ அவர்கள் வரைந்து கொடுத்த வரைபடத்தை ஆஜர்

செய்கிறேன். இந்த வாக்குமூலத்தை என்னிடம் படித்து காண்பித்த போது நான் சொன்னபடி சரியாக இருந்தது. இப்படிக்கு Sd/-xxxx A.Murugesan, 9.11.2024. Sir, Received the complaint statement on 09.11.2024 at 15.00 hrs and made preliminary verification and after getting approval from DVAC, Chennai registered a case in Tiruppur V&AC Cr.No.11/2024/AC/TPR u/s 7 (a) of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 on 11.11.2024 between 07.45 hrs to 08.45 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 11/11/2024 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint statement (oral) of A.Murugesan, S/o.Arumugam, 99, Venkamedu, Vallipuram Post, Kunnathur, Uthukkuli Taluk, Tiruppur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 11.11.2024.